# பனித்துளி செய்திகள்!

"அவர் சொல்ல ஆகும்! அவர் கட்டளையிட நிற்கும்!!" (சங்கீதம் 33:9)

துளி செய்திகள் உங்கள் வாழ்வை சாரம் ஏற்றும்..... சவாலிடும்!

(திங்கள்தோறும்)

**20.01.2025**

## 3. நம்மை 'சீரழிக்கும் பெருமை' பெலவீனமடையட்டும்!

பரிசுத்த பவுலுக்கும் "சாத்தானுடைய தூதன்" அனுமதிக்கப் பட்டான்! (2கொரி12:7). சாத்தான், பவுலுக்கு கொண்டுவந்த 'நிந்தைகள்' 'நெருக்கங்கள்' 'துன்பங்கள்' 'இடுக்கண்கள்' பவுலை அழித்திட முடியவில்லை..... மாறாக, பவுல் தன்னை உயர்த்தாத படிக்கு, அவரைப் பெலவீனப்படுத்தியது! ஆம், பவுலின் "பெருமையை" பெலவீனப்படுத்தியது!!

பெருமைக்கு நிகழ்ந்த 'பெலவீனத்தை' மனப்பூர்வமாய் ஏற்றுக் கொண்ட பவுலுக்கு.... "என் கிருபை உனக்குப் போதும்!" என தன் கிருபையை அளவில்லாது தந்து கர்த்தர் ஆசீர்வதித்தார்! (2கொரி.12:9).

சாத்தான் மூலம் கிரியை செய்யப்பட்ட 'பெலவீனங்கள்'....... பவுலுக்கு 'தேவ பெலனாய்' மாறியது!! அது மாத்திரமல்லாமல், அந்த 'பெலவீனங்களைக் குறித்து' தான் மிகவும் சந்தோஷப் படுவதாகக் கூறிய விந்தையைக் கண்டு...... சாத்தான் பவுலிடம் தோல்வியுற்று ஓடியே போயிருப்பான்!!

.

– ரத்னம்